Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 08, 2022

வியாழக்கிழமை டிசெம்பர் 08, 2022 | ஒளி: 08 கதிர்: 160 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



இலங்கையில்

## உணவைத் தவிர்ப்போர் எண்ணிக்கை கூடும்

பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான உத்தியாக 5.3 மில்லியன் இலங்கை மக்கள் ஏற்கெனவே உணவைத் தவிர்த்துக் கொண்டிருந்தாலும், இந்த எண்ணிக்கை வரும் மாதங்களில் வானிலையால் தூண்டப்பட்ட இயற்கை ஆபத்துகள் மற்றும் அரசியல் நெருக்கடி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தாக்கத்துடன் கடுமையாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

2023 முதல் இ.மி.சவினால்

## காகிதமில்லா கட்டண பட்டியல், பற்றுச்சீட்டு



இலங்கை மின்சார சபையின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் 2023 ஜனவரி மாதம் முதல் காகிதமில்லா கட்டண பட்டியல் மற்றும் பற்றுச்சீட்டுகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கடன் மறுசீரமைப்பு குறித்து சீனா உறுதியளித்தால்

# ஜனவரியில் ஐ.எம்.எப் உதவி

**இலங்கை எதிர்பார்ப்பதாக ஆளுநர் நந்தலால் தெரிவிப்பு**

**பாரிஸ் கிளப் மற்றும் இந்தியா என்பன உறுதி என்கிறார்**



டிசெம்பர் மாதத்துக்குள் கடன் மறுசீரமைப்புக்கான உறுதிமொழியை சீனா வழங்கினால், ஜனவரி மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்) நிதியுதவிக்கான அனுமதியைப் பெற முடியும் என்று இலங்கை எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இலங்கை பொருளாதார உச்சி மாநாடு 2022 இல் உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சீனாவின் உறுதிமொழியைப் பெறுவதற்கு இலங்கை தற்போது செயற்பட்டு வருகிறது. கடன் மறுசீரமைப்புக்கான ஆதரவில்

தொடர்ச்சி P2



2023ஆம் ஆண்டுக்கான

## பட்ஜெட்டின் இறுதி வாக்கெடுப்பு இன்று


**ரணில் – சஜித் பலப்பரீட்சை**

பா.நிரோஸ்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சமர்ப்பித்துள்ள 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் இன்று (08) நடைபெற உள்ளது.

தொடர்ச்சி P2



வெளிநாட்டவர்களுக்கான

## கொவிட் கட்டுப்பாடுகளை தளர்த்தியது அமைச்சு

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு விஜயம் செய்யும் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கொவிட்-19 கட்டுப்பாடுகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



போதைப்பொருள் பாவனையில் இருந்து

## மலையக மாணவர்களை காக்க இ.தொ.கா நடவடிக்கை

ஆ.ரமேஸ்

மலையகத்தில் பாடசாலை மாணவர்களை போதைப்பொருள் பாவனையிலிருந்து காப்பாற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், மத்திய மாகாண நுவரெலியா மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

தொடர்ச்சி P2

## அடுத்த வருடம் முதல் தொடர் மின் விநியோகம்

**கட்டண அதிகரிப்பு அவசியம் என்கிறது இ.மி.ச**

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

அடுத்த வருடம் முதல் 24 மணித்தியால மின்சார விநியோகத்தை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ள காரணத்தால், கட்டணத்தை அதிகரிக்காமல் தொடர் மின்சார விநியோகத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்று மின்சார சபையின் தலைவர் நளிந்த இலங்ககோன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

அடுத்த வருட ஆரம்பத்தில்

## சிலிண்டர் விலை குறைவடையலாம்




அடுத்த வருடத்தின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் எரிவாயு சிலிண்டர்களில் விலை குறையலாம் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



2022ஆம் ஆண்டில் உலகின்

## செல்வாக்கு மிக்க பெண் சந்தியா எக்னெலிகொட

2022 ஆம் ஆண்டுக்கான உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க பெண்களில் ஒருவராக இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளர் சந்தியா எக்னலிகொட பி.பி.சியால் பெயரிடப்பட்டுள்ளார்.

அரசியல், அறிவியல், விளையாட்டு, பொழுதுபோக்கு, இலக்கியம் போன்ற பல துறைகளைச் சேர்ந்த பெண்களை உள்ளடக்கி, உலகில் மிகவும் செல்வாக்கு மிக்க 100 பெண்களின் பட்டியலை பி.பி.சி வெளியிட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு முதல் காணாமல் ஆக்கப்பட்ட புலனாய்வு ஊடகவியலாளரும் கேலிச்சித்திர கலைஞருமான பிரகீத் எக்னலிகொடவின் மனைவியான சந்தியா எக்னலிகொட, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தவர்.

இலங்கையில் காணாமல் போனவர்களின் தாய்மார் மற்றும் மனைவிகளுக்கு ஆதரவாக அவர் மேற்கொண்ட பணிகளுக்காக அவர் பல பாராட்டுகளைப் பெற்றதுடன், மனித உரிமைகளுக்காக ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் பல அறிக்கைகளை சந்தியா வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமைகள் தினத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி




க. அகரன்

மனித உரிமைகள் தினமான எதிர்வரும் 10ஆம் திகதி, வவுனியாவில் முன்னெடுக்கவுள்ள ஆர்ப்பாட்ட பேரணிக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

மின்கட்டண விவகாரம்

## மக்களை பயமுறுத்தி அதிகரிக்க முயற்சி



மக்களை பயமுறுத்தி மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசியல்வாதிகள் முயன்று வருவதாகவும் அரசியல்வாதிகளின் இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு மக்கள் பலியாகக்கூடாது என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சபுகஸ்கந்த நிலையம் டிசெ. 15 முதல் இயங்கும்

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மீள ஆரம்பிப்பதற்கு மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

2 இலட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் ஏற்றிய இரண்டு கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளதாகவும் நிலையத்தை இயக்குவதற்கு தேவையான எண்ணெய் கிடைத்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

மசகு எண்ணெய் அடங்கிய மற்றுமொரு கப்பல் இன்னும் சில தினங்களில் நாட்டை வந்தடையும் எனவும் அமைச்சு தெரிவித்தது.

இதேவேளை, சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர, ஒக்டோபர் 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

மசகு எண்ணெய்க்கான அந்நிய செலாவணி

தொடர்ச்சி P2



## “சிவபெருமான் யாருடைய ஆள்”

**பாதுகாப்பு தரப்பினர் விசாரணை**

எம்.றொசாந்த்

“சிவபெருமான் யாருடைய ஆள்” என்று பாதுகாப்பு தரப்பு தன்னிடம் விசாரணைகளை முன்னெடுத்து இரண்டு பக்கங்களில் அறிக்கை எழுதிச் சென்றதாக, தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் ‘செஞ்சொற்செல்வர்’ கலாநிதி ஆறு திருமுருகன், புதன்கிழமை (07) தெரிவித்தார்.

சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் ‘யாழ்ப்பாணம் வரவேற்கிறது’ வளைவுக்கு அருகில் ஏழு அடி உயரமான சிவபெருமான் சிலையை புதன்கிழமை (07) பிரதிஷ்டை செய்து வைத்த பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், “கடந்த மாத இறுதிப் பகுதியில் நாவற்குழி பகுதியில் சிவலிங்கத்தை வைக்க நிரந்தரமான கட்டடம் ஒன்று அமைக்க வேண்டும் என்று சிவ பூமி அறக்கட்டளையினர் தீர்மானித்திருந்தோம்.

அதற்குரிய பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது, பாதுகாப்பு தரப்பினர் வந்து பலதடவை விசாரணை மேற்கொண்டனர்.

இதுவொரு சைவ கோவில் இந்துகளின் தெய்வமாகிய சிவபெருமானின் அடையாளமாக சிவலிங்கம் தான் இங்கே வைக்கப் போகின்றோம் எனக் கூறினோம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## காகிதமில்லா கட்டண பட்டியல், பற்றுச்சீட்டு

இலங்கை மின்சார சபையின் பிரதேச பொது முகாமையாளர்கள் மற்றும் ஏனைய பொது முகாமையாளர்களுடன் இணைய வழியில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக அமைச்சர், தனது டுவிட்டரில் நேற்று (07) குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபையின் செலவினங்களைக் குறைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்த அமைச்சர், இலங்கை மின்சார சபைக்கான புதிய தலைமையகத்தின் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மேலும், தெருவிளக்குகள் பொருத்துதல், தெருவிளக்குகளை இயக்குதல் ஆகியவற்றை முறைப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் சபையால் செய்ய முடியாத வெளிச் சேவைகளை உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

## கொவிட் கட்டுப்பாடுகளை தளர்த்தியது அமைச்சு



தொற்று பரவுவதை தடுப்பதற்காக கடந்த ஏப்ரல் மாதம் அமல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு பயணிகள், கொவிட் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டமைக்கான அட்டையை இனிவரும் நாள்களில் சமர்ப்பிக்க தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எந்தவொரு விமான நிலையம், துறைமுகம் வழியாக நாட்டுக்குள் நுழையும் எந்தவொரு நபரும் பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. வருகை அல்லது புறப்பாட்டு சந்தர்ப்பங்களில் குறித்த அறிக்கைகள் அவசியம் இல்லை என்றே அமைச்சின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாதாயினும் ஒரு பயணிக்கு இலங்கையில் வைத்து, கொவிட் -19 தொற்று உறுதி செய்யப்படின், குறித்த நபர் தனியார் வைத்தியசாலை, ஹோட்டல் அல்லது அவர்கள் வசிக்கும் இடத்தில் 07 நாள்கள் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அடுத்த வருடம் முதல் தொடர் மின் விநியோகம்

மின்சார சபை பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்த அவர், சபையின் செலவுகளை ஈடுகட்டுவதற்கு மின் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மின்சார சபை குறைந்த விலையில் ஓர் அலகு மின்சாரத்தை வழங்குவதாலும், செலவுகளின் அதிகரிப்புக்கு ஏற்ப 2013 ஆம் ஆண்டு முதல் முறையாக மின் கட்டணத்தை அதிகரிக்காததாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் மின்சக்தி அமைச்சும் இணைந்து மின் கட்டண உயர்வை செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மின் உற்பத்திக்கு தேவையான நிலக்கரி, திட்டமிட்டபடி முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் நிலக்கரிக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

# ஜனவரியில் ஐ.எம்.எப் உதவி

மறுசீரமைப்புக்கான ஆதரவில் இலங்கையின் கடன் வழங்குநர்களுடன் பொதுவான ஒருமித்த கருத்தைப் பெறுவதே முன்னுரிமை என்று குறிப்பிட்டார்.

நவம்பர் மாதத்துக்குள் சீனாவின் உறுதிமொழியைப் பெறுவதற்கு முதலில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தாமதத்தின் பின்னர் சீனாவுடனான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

சீனாவின் உறுதிமொழிகளைப் பெறுவதில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், இலங்கைக்கு ஆதரவாக பாரிஸ் கிளப் மற்றும் இந்தியா ஏற்கெனவே உறுதி அளித்துள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

திட்டமிட்டபடி நவம்பரில் சீனாவின் உத்தரவாதம் கிடைத்திருந்தால், நிதி உதவிக்கான ஐ.எம்.எப் பணிப்பாளர் சபையின் அனுமதி டிசெம்பரில் கிடைத்திருக்கும் என்றார்.

எவ்வாறாயினும், சீனாவின் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தாமதம் இதனைத் தடுத்துள்ளது என்றும் டிசெம்பர் மாதத்துக்குள் சீனாவின் உறுதிமொழியைப் பெறுவதே இலங்கையின் முன்னுரிமை எனவும் தெரிவித்தார்.

அத்தகைய உடன்பாடு எட்டப்பட்டால், ஜனவரி மாதம் நிதி உதவிக்கான சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதியை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

## மனித உரிமைகள் தினத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி



வவுனியா ஊடக அமையத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தெரிவிக்கையில், "குறித்த பேரணியை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், மனித உரிமை அமைப்புகள், மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், இணைந்து வடக்கு கிழக்கில் முன்னெடுக்கவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலே கல்லடி பாலத்திலே பேரணி ஆரம்பிக்கப்பட்டு காந்தி பூங்காவிலே முடிவடையவுள்ளது.

அதேபோன்று வடக்கிலே அனைத்து மாவட்டங்களையும், உள்ளடக்கியதாக வவுனியா கந்தசுவாமி கோவிலில் பேரணி ஆரம்பிக்கப்பட்டு பஜார் வீதியினூடாக பழைய பஸ் நிலையத்தில் முடிவடைகின்றது.

இப்பேரணிக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், வர்த்தகர்கள், தமிழ் தேசியத்தை நேசிக்கும் அரசியல்கட்சிகள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலகர்கள், கலந்துகொண்டு உறுதுணையாக இருக்க வேண்டும் என தெரிவித்தனர்.

## சிலிண்டர் விலை குறைவடையலாம்



உலக சந்தையின் எரிவாயு விலைகளுக்கு ஏற்ப விலைக்குறைப்பு அமலாகும் என்று தெரிவித்த அவர், 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை தற்போதைக்கு அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நுகர்வோரின் நலன் கருதியே 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 250 ரூபாயால் அதிகரிக்கப்பட்டதாகவும் எனினும், அந்த விலையை விட அதிகரித்திருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

பொறுப்பு வாய்ந்த நிறுவனம் என்ற அடிப்படையில் மக்களின் நலன் கருதியே தாம் 250 ரூபாயை அதிகரிக்க தீர்மானித்ததாக குறிப்பிட்டார்.

கடந்த 5ஆம் திகதி முதல் அமலாகும் வகையில், 12.5, 5 மற்றும் 2.3 கிலோ கிராம் நிறையுடைய உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைககளை முறையே 250, 100, 45 ரூபாயால் லிட்ரோ உயர்த்தியிருந்தது.

அதற்கமைய 12.5 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 4,360 ரூபாயில் இருந்து 4,610 ரூபாயாகவும் 1,750 ரூபாயாக இருந்த 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,850 ரூபாயாகவும், 815 ரூபாயாக இருந்த 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 860 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மக்களை பயமுறுத்தி அதிகரிக்க முயற்சி



மின் கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் அடுத்த வருடத்தில் 6 அல்லது 8 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பை அமல்படுத்த வேண்டி ஏற்படும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (06) தெரிவித்திருந்தார்.

இலங்கை மின்சார சபை மாதாந்தம் 423 பில்லியன் ரூபாயை வருமானத்துக்கு மேலதிகமாக செலவிடுகிறது என்றும் இந்தத் தொகையை வழங்க முடியாது என திறைச்சேரி குறிப்பிட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

தற்போது மின் அலகு ஒன்றுக்காக 56.90 ரூபாய் செலவாகின்ற போதும், மக்களிடமிருந்து 29.14 ரூபாய் அறவிடப்படுகிறது என்றும் இலங்கை மின்சார சபை மாதாந்தம் 423 பில்லியன் ரூபாயை வருமானத்தை காட்டிலும் மேலதிகமாக செலவிடுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

மின்கட்டணத்தை அதிகரிக்கும் அமைச்சரவை யோசனை சட்டபூர்வமானது இல்லை என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளமை பொருத்தமற்றது என்று அவர் தெரிவித்த நிலையிலேயே, ஆணைக்குழுவின் தலைவரால் மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமையவே மின்கட்டணம் திருத்தம் தொடர்பான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் காஞ்சன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சபுகஸ்கந்த நிலையம் டிசெ. 15 முதல் இயங்கும்

தட்டுப்பாடு காரணமாக சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தை இவ்வாறு மூட தீர்மானிக்கப்பட்டதாகவும் எனினும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களில் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

## "சிவபெருமான் யாருடைய ஆள்"

அப்போது அவர்கள், "சிவபெருமான் என்றால் அவர் யாருடைய ஆள்?" என்று வினவியதற்கு, அதற்கு நாங்கள் "அவர் தான் எங்களுடைய பரம்பொருள்" என கூறினோம். அதனை தொடர்ந்தும் சில கேள்விகளை கேட்டு அதை இரண்டு பக்கங்களில் எழுதிச் சென்றார்கள்.

அவ்வாறு பல விசாரணைகளுக்கு நாங்கள் முகம் கொடுத்து, சிவபெருமானின் அடையாளமான சிவலிங்கத்தினை யாழ்ப்பாணத்தில் வைப்பதற்கு பல இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டி இருக்கின்றது.

யுத்த காலத்தில் கூட, எமது இந்து மதத்தை கட்டி காத்து வந்த நாம் தற்போது சிவன் சிலைகளை பல இடங்களில் வைப்பதன் மூலமே இந்து மதத்தின் அடையாளங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

குறிப்பாக இந்தப் பகுதியில் மூன்று ஏக்கர் காணியை கொள்வனவு செய்துள்ளோம். அதற்கு உதவிய அரச திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அத்தோடு இந்த வீதியால் பயணிக்கும் அடியவர்கள், சிவலிங்கத்தை வணங்கி யாழ்ப்பாண நகருக்குள் பிரவேசிப்பதற்கு ஏற்றவாறாக ஒரு புனிதத் தன்மையோடு இந்த இடத்தைப் பேணுவதற்காக, கருங்கல்லிலான 7 அடி சிவலிங்கத்தை அமைத்து, நித்தம் ஒரு பூஜை வழிபாடும் இடம் பெறக்கூடியவாறு ஏற்பாடுகளை செய்திருக்கின்றோம் என்றார்.

## உணவைத் தவிர்ப்போர் எண்ணிக்கை கூடும்

2023ஆம் ஆண்டின், குழந்தைகளுக்கான மனிதாபிமான நடவடிக்கை பற்றிய சமீபத்திய யுனிசெஃப் அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டில், 2.9 மில்லியன் குழந்தைகள் உட்பட 6.2 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் அவசரமாகத் தேவைப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை கணித்துள்ளது.

மேலும், அதிகரித்து வரும் பணவீக்கம், வருமான பாதுகாப்பின்மை மற்றும் அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால், குடும்பங்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதாக யுனிசெஃப் தெரிவித்துள்ளது.

ஐந்தில் இரண்டு குடும்பங்கள் (41.8 சதவீதம்) தங்கள் சம்பளத்தில் 75 சதவீதத்துக்கும் மேலாக உணவை வாங்குவதற்குச் செலவிடுகிறார்கள்.

இதனால் சுகாதாரம் மற்றும் கல்விக்காகச் செலவிடவில்லை என்றும் பல குடும்பங்கள் தங்களுடைய சேமிப்பு தீர்ந்துள்ள நிலையில், போராடி வருகின்றன.

2022 ஆம் ஆண்டில், குறிப்பாக கிராமப்புற மற்றும் தோட்டப் பகுதிகளில் குழந்தைகள் பாதுகாப்பு பிரச்சினைகள் கணிசமாக அதிகரித்ததுடன், அதிகரித்து வரும் உணவுப் பாதுகாப்பின்மை, வறுமை மற்றும் உள் மற்றும் வெளி தொழிலாளர் இடம்பெயர்வு போன்ற காரணங்களால் குழந்தைகள் பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்கின்றனர் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## பட்ஜெட்டின் இறுதி வாக்கெடுப்பு இன்று

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எதிர்க்கட்சிக்குக் கிடைத்த மற்றொரு வாய்ப்பிலும் எதிர்க்கட்சிக்கு தோல்வியே கிடைக்க உள்ளது.

நிலையான மற்றும் நீண்ட கால பொருளாதார அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் 14ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இவ்வாறான நிலையில், வரவு செலவு திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு இன்று (08) மாலை நடைபெற உள்ளது. பாராளுமன்றத்துக்கு அருகில் தொழிற்சங்கங்களும் பல்வேறு போராட்டங்களை நடத்துவதற்கு இன்று திட்டமிட்டுள்ளதால் பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலேயே பாராளுமன்றத்தில் வரவு செலவு திட்டத்துக்கான வாக்கெடுப்பு நடைபெற உள்ளது.

வரவு செலவு திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற நிலையில் வரவு செலவு திட்டத்துக்கு ஆதரவாக 121 வாக்குகளும் எதிராக 84 வாக்குகளும் செலுத்தப்பட்டு 37 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இதன்பின்னர் குழுநிலை விவாதம் ஆரம்பமாகி இன்று இறுதி வாக்கெடுப்பு நடைபெற உள்ளது. இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு வெற்றியே கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரவு செலவு திட்டத்தை தோற்கடித்து ஆட்சியைக் கவிழ்க்க எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும் அந்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாக அறிய முடிகிறது.



## மலையக மாணவர்களை காக்க இ.தொ.கா நடவடிக்கை

இது தொடர்பில் கவனம் செலுத்திய பிரதி பொலிஸ் மாஅதிபர் தலைமையில் நேற்று (07) காலை ஹட்டன் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது, நுவரெலியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் அனைத்துக்கும் அந்தந்த பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பாடசாலைகளுக்குச் சென்று, மாணவர்களை போதை பொருள் பாவனையிலிருந்து விடுவிக்க கட்டாய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் அதிகாரிகளுக்கு பணித்தார்.

அத்துடன், இந்த உத்தரவை மீறும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதி பொலிஸ் மாஅதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் மலையக தோட்டப் பகுதிகள், நகர் பகுதிகளில் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனையில் ஈடுபடாமல் இருக்க, இ.தொ.கா அரசியல் ரீதியாகவும், தொழிற்சங்க ரீதியாகவும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கும் என ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# போராட்டக்காரர்களின் அமைதியே பசிலின் பேச்சுக்குக் காரணம்

நாட்டில் பேரழிவை ஏற்படுத்திவிட்டு ஓடியொழிந்து கொண்டிருந்த பசில் ராஜபக்ஷ பொதுவெளியில் சுதந்திரமாக வந்து பேசுவதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒரு குற்றவாளியென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்க வீரசுமன தெரிவித்தார்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், வெளிநாட்டில் இருந்து வந்து, விமான நிலையத்திலிருந்துகூட வெளியில் வர முடியாத நிலையில் இருந்து, ஒளிந்திருந்து பின்னர் மீண்டும் வெளிநாட்டுக்கு சென்று, நாட்டின் அனைத்துப் பேரழிவுகளுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய பசில் ராஜபக்ஷ, வெளியில் வந்து பேசுவதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு குற்றவாளியென தெரிவித்தார்.

இந்தச் சிஸ்டத்தை மாற்ற வேண்டும். போராட்டத்துக்கு தலைமை தாங்கிய இலட்சக்கணக்கான மனிதர்கள், தற்போது அமைதியாக இருக்கிறார்கள். போராட்டத்தில் இருந்த சில குழுக்கள், தனியாகப் பிரிந்து ஓர் இடத்துக்கு சென்றுள்ளது. ஆனால், உண்மையில் பிரச்சினை என்ன என்பதை புரிந்துகொண்டவர்கள் போராட்டக்களத்தில் இருக்கிறார்கள்.

போராட்டத்தில் கடந்த காலத்தில் கலந்து கொண்டவர்கள் தற்போது அமைதியாக இருப்பதாலேயே பசில் ராஜபக்ஷ இவ்வாறு வெளியில் வந்து பேசுவதற்குக் காரணம் எனவும் அவர் மேலும் குற்றஞ்சுமத்தினார்.

## பசில் இன்னும் அச்சத்துடனேயே இருக்கிறார்

மக்கள் தொடர்பில் பசில் ராஜபக்ஷ மிகுந்த அச்சத்திலேயே இருப்பதாகத் தெரிவிக்கும் முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ, ரணில் - ராஜபக்ஷ 'திருடன் -பொலிஸ்' விளையாட்டையே விளையாடி கொண்டிருப்பதாகவும் கேலி செய்தார்.



ராஜபக்ஷர்களும் ரணில் விக்கிரமசிங்கவும் கள்ளன் பொலிஸ் விளையாட்டையே விளையாடி வருகிறார்கள். ரணில் - ராஜபக்ஷர்களுக்குப் பொறுப்புகளை வழங்குவதும் ராஜபக்ஷர்கள் ரணிலுக்குப் பொறுப்புகளை வழங்குவதுமே அரசியலில் இத்தனைக் காலமாக நீடித்திருந்தது.

எவ்வாறாயினும் காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் இதனை சவாலுக்கு உட்படுத்தினார்கள். இதன் பின்னர், எதிர் எதிர் திசையிலிருந்து கள்ளன் - பொலிஸ் விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்த ரணில் - ராஜபக்ஷர்கள் ஓர் இடத்துக்கு வந்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுகளை நன்கு அவதானித்தால், அவர் போராட்டக்காரர்களுக்கும் சோஷலிச முன்னிலைக் கட்சிக்கும், பொலிஸ் ஆணைக்குழுவுக்கும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குமே குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்.

உண்மையில், பசில் ராஜபக்ஷ, மக்கள் மீது மிகுந்த அச்சத்தில் இருக்கிறார். ஜூலை 09ஆம் திகதி போராட்டத்துக்கு சுமார் 10 இலட்சம் பேர் வந்ததாக அரச புலனாய்வுப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போராட்டத்தில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், விபசாரத்தில் ஈடுபடுபவர்கள் என அனைவரும் இருந்தார்கள். நாட்டின் அரசியல் தொடர்பில் பேசுவதற்கு அவர்களுக்கும் உரிமை இருக்கிறது எனவும் தெரிவித்தார்.



## வைத்தியசாலையில் சிறிதம்ம தேரர்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கல்வெவ சிறிதம்ம தேரர், சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பாடசாலை மாணவர்களுக்கு போதைபொருள் விற்றவர் கைது

■ *நீர்கொழும்பு நிருபர் எம். இஸட். ஷாஜஹான்*

நீர்கொழும்பு கொச்சிக்கடை பொலிஸ் பிரிவில் பாடசாலை மாணவர்களுக்கு போதைபொருளை விற்பனை செய்து வருபவர் என்கிற சந்தேகத்தின்பேரில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து கஞ்சா கலந்த 354 கிராம் பாபுல் போதை பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



கொழும்பு, வெல்லம்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதோடு, சந்தேகநபரை இன்று (08) நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## சூறாவளியாக தீவிரமடையலாம்

■ *க.விஜயரெத்தினம்*

மாண்டேஸ் (Mandous) சூறாவளியாக தீவிரம் அடைய வாய்ப்புள்ளதால் பொதுமக்கள், மீனவர்கள் அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் நேற்றுமுன்தினம் (06) ஏற்பட்ட தாழமுக்கமானது மணிக்கு 22km/h வேகத்தில் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நேற்று (07) தென்கிழக்கு வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் காணப்படுவதாக முன்னாள் சிரேஷ்ட வானிலை அதிகாரி க.சூரியகுமாரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், தற்போது திருகோணமலையிலிருந்து கிழக்காக 640 கிலோ மீற்றர் தூரத்திலும் யாழ்ப்பாணத்திலிருந்து கிழக்கு -தென்கிழக்காக 780 கிலோ மீற்றர் தூரத்திலும் காரைக்காலில் இருந்து கிழக்கு-தென்கிழக்காக 840 கிலோ மீற்றர் தூரத்திலும் சென்னையிலிருந்து தென்கிழக்காக 900 கிலோ மீற்றர் தூரத்திலும் காணப்படுகின்றது.

இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து ஒரு மாண்டேஸ் சூறாவளியாக தீவிரமடைய வாய்ப்புள்ளது. இதனால், பொதுமக்கள், மீனவர்கள் அவதானமாக இருக்குமாறும், ஆறுகளில், வாவிகளில், கடல்களில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



## 'சிறுவர் திருமணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க மாண்புடன் கூடிய மாதவிடாய்' மாநாடு

■ *வடமலை ராஜ்குமார்*

விழுது அமைப்பும் மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான உலகளாவிய தெற்கு கூட்டணியும் ( GSCDM) இணைந்து 'சிறுவர் திருமணங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மாண்புடன் கூடிய மாதவிடாய்' என்ற தலைப்பில் கலப்பு மாநாட்டை நடத்துகின்றது. இம்மாநாடு நாளை (08) காலை 10.30 முதல் மாலை 6.00 மணி வரை மெய்நிகரில் நடைபெற உள்ளது.




விழுது அமைப்பும் மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான உலகளாவிய தெற்கு கூட்டணியும் இணைந்து 'சிறுவர் திருமணங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மாண்புடன் கூடிய மாதவிடாய்' என்ற தலைப்பில் கலப்பு மாநாட்டை நடத்துகின்றது. இந்த மாநாடு மாதவிடாய் பாரபட்சம் மற்றும் சிறுவர் திருமணங்களுக்குடையிலான தொடர்பை ஆராயும் மாநாடாக இடம்பெறவுள்ளதுடன், இதில் தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசிய நாடுகளைச் சேர்ந்த தன்னார்வலர்கள், தலைவர்கள், இளைஞர்கள், கல்வியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இலங்கையின் பின்தங்கிய பொருளாதார நெருக்கடிகள் மற்றும் சுகாதாரம் பற்றிய சவால்கள் நிறைந்த இந்த காலப்பகுதியில் பெண்களும் சிறுமிகளும் எதிர்கொள்கின்ற பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்த மாநாடு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மோடியை அழைத்து வர முயலும் இ.தொ.கா

இந்திய வம்சாவளி தமிழர்களான மலையக மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200ஆவது ஆண்டை முன்னிட்டு, விசேட விழாவொன்றை நடத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பணிகளை முன்னெடுத்துவருதுடன், இந்த விழாவில் பிரதம அதிநிதியாக பாரத பிரதமர் நரேந்திர மோடியை வரழைப்பதற்கான அழைப்பிதழை வழங்கவும் இ.தொ.கா நடவடிக்கை எடுத்துள்ளது.



இது தொடர்பில் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வருகைதந்து 200ஆவது ஆண்டை முன்னிட்டு அதனை கொண்டாட இ.தொ.கா நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிகழ்வில் கலை, கலாசாரம், பண்பாடு, இலக்கியம், பாரம்பரிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளின் ஊடாக மலையக மக்களின் திறமைகளை உலகறிய செய்வது இதன் நோக்காகும்.

இந்த விழாவில் மலையகத் தமிழர்களின் எதிர்கால பயணம் மற்றும் அவர்களுக்கான திட்டங்கள் தொடர்பில் கருத்தாடல்களும் இடம்பெறவுள்ளன.

விழாவுக்கு பிரதம அதிதியாக பாரத பிரதமரை அழைக்க இ.தொ.கா. நடவடிக்கை எடுத்துள்ளதுடன், உலகளாவிய ரீதியில் பல்வேறு தலைவர்களை அழைக்கவும் இ.தொ.கா முடிவுசெய்துள்ளது. விழாவை சிறப்பாக செய்வதற்கான ஏற்பாடுகளை இ.தொ.கா செய்துவருவதாகவும் அறிவித்துள்ளது.

## உணவகங்களில் உணவுகளின் விலைகளை அதிகரிக்க வேண்டாம்

காஸ் விலைகள் அதிகரிக்கப்பட்டாலும் உணவகங்களின் விற்பனை செய்யப்படும் உணவுகளின் விலைகள் அதிகரிக்கப்படாதென உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.


காஸ் விலை உயர்வை காரணங்காட்டி ஏதாவது ஹோட்டல்களில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்திருந்தால் அவர்களுக்கு எதிராக நுகர்வோர் அதிகாரசபையிடம் முறைப்பாடு செய்யுமாறும், அதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.



காஸ் விலை அதிகரிக்கப்பட்டிருந்தாலும் சந்தையில் மா, கோழி இறைச்சி உள்ளிட்டப் பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளதால், காஸ் விலை அதிகரிக்கப்பட்டதைக் காரணங்காட்டி உணவுகளின் விலைகளை தற்போது அதிகரிப்பதற்கு அவசியமில்லை. எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் அப்போது உணவுகளின் விலைகளை எம்மால் அதிகரிக்க முடியும். எனவே, தற்போது உணவுகளின் விலைகளை அதிகரிக்க வேண்டாம் எனவும் அவர் உணவக உரிமையாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

## பண்டிக்கைக் காலத்தில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்படாது

பண்டிக்கைக் காலத்தில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்படாதென தெரிவிக்கும் இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.எம்.சரத் அத்தநாயக்க, நுகர்வோருக்கு தேவையான அளவு முட்டைகளைக் கொள்வனவு செய்துகொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.



அரசாங்கம் விதித்துள்ள முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையைவிட குறைவான விலைக்கு பண்டிக்கைக் காலத்தில் முட்டையை கொள்வனவு செய்ய முடியும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முட்டையின் விலை 50 ரூபாயைத் தாண்டாது.

பண்டிக்கைக் காலத்தில் கேக் போன்ற பொருட்களை தயாரிக்க முட்டை தேவைப்படுவதால் பேக்கரிகளிடமிருந்து முட்டைக்கான கேள்வி அதிகரித்துள்ளபோதிலும் முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்படாது.

முட்டை உற்பத்தியாளர்கள் எனக் கூறிக்கொள்ளும் சிலர், முட்டைக்கான தட்டுப்பாடு இருப்பதாகக் கூறி முட்டையின் விலையை அதிகரிக்க முயல்கிறார்கள். முட்டையின் விலையை அதிகரிக்க முயல்பவர்களின் வீடுகளில் கோழி கூட கிடையாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை நான்கு பக்கமும் கடனால் சூழப்பட்ட நாடு

இலங்கையானது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ள போதிலும், நாம் டொலரைச் செலவழித்து வெளிநாடுகளிலிருந்து டின் மீன்களை இறக்குமதி செய்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகளால் நாம் கடலால் மாத்திரமல்ல கடனாலும் சூழப்பட்டுள்ளோம் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.



நம்மை விட நமது அயல் நாட்டு மீனவர்கள் நமது கடல் வளத்தை நன்கு அறிந்து வைத்துள்ளார்கள். அதனால்தான் அவர்கள் நமது கடல் எல்லையில் அத்துமீறி மீன்பிடித்து நமது மீன்வளத்தினை கொள்ளையடித்து செல்கிறார்கள்.

நான் பிரதிநிதித்துவப்படுத்தும் திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை தொடக்கம் வெருகல் வரையான பகுதி கடல் வளமும், ஏரிகளும் நிறைந்த நீண்ட பிரதேசமாகும். தற்பொழுது சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலை மேற்கொள்வோர் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதன் காரணமாக பல மீன்பிடிப் படகுகள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன. தற்போதைய எரிபொருள் பிரச்சினை காரணமாக மீனவர்களால் அதிக தூரம் பயணம் செய்து மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளது. எனவே, இவ்விரு விடயங்களையும் கருத்திக்கொண்டு சுருக்கு வலைக்கு விதிக்கப்பட்டுள்ள ஏழு கடல் மைல் என்ற கட்டுப்பாட்டினை நான்கு கடல் மைல்களாக தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், மீனவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு எரிபொருள் அமைச்சருடன் பேசி மீன்பிடி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது மீனவர்களின் இயந்திரங்களுக்கு எரிபொருள் பிரச்சினை பாரிய பிரச்சினையாக இருப்பதால், எரிபொருளை பயன்படுத்தும் இயந்திரங்களுக்கு பதிலாக மின் சக்தியில் இயங்கும் இயந்திரங்களை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகையான இயந்திரங்கள் தாய்லாந்தில் பிரபலமானவை. இதன் மூலம் கடல் மாசுபடுவதும் குறைவடையும்; மண்ணெண்ணெய்க்கான கேள்வியும் குறைவடையும் எனவும் தெரிவித்தார்.

பாடசாலையில் நல்ல மாணவர்களை உருவாக்காவிட்டால்

# நாட்டில் நல்ல பிரஜைகள் இல்லாமல் போய்விடுவார்கள்



■ அபு அலா

மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வியுடன், ஒழுக்கக் கல்வியையும் சேர்த்து வழங்குகின்றபோதுதான் அவர்களின் எதிர்காலம் சிறந்ததாக அமையும் என்று கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எ. மன்சூர் தெரிவித்தார்.

'இலங்கை காப்போம்' தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில், திருகோணமலை அம்பாள் பாடசாலையில் கல்விகற்கும் தரம் 5 11 வரையாயான மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, காப்போம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. ருக்ஸாலி ரொனிக்கா தலைமையில் செவ்வாய்க்கிழமை (06) குறித்த பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எ. மன்சூர் கலந்துகொண்டு மேலும் கூறியதாவது; கல்வியில் கிடைக்கப்பெறும் நன்மைகள், நல்ல மனிதர்களை உருவாக்குவது மட்டுமல்லாமல் அவர்களை நல்ல முறையில் செயலாற்றவும் உதவுகின்றது.

ஒரு மாணவனுக்கு எந்தளவுக்கு அனுபவக் கல்வி அவசியமோ, அதேயளவுக்கு விழுமியக் கல்வியும் அவசியமாகும். மாணவர்களிடையே விழுமியத்தை ஏற்படுத்துவது தொடர்பாக ஆசிரியர்கள் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். அப்போதுதான் மாணவர்களிடையே சிறந்த விழுமியக் கல்வியை போதிக்க முடியும்.

பாடசாலையில் நல்ல மாணவர்களை உருவாக்காவிட்டால், நாட்டில் நல்ல பிரஜைகள் இல்லாமல் போய்விடுவார்கள். அதனால் கலாசார சீரழிவு, சமூக ஒற்றுமை, சமூக நீதி என்பன இல்லாதுபோவதுடன், எதிர்கால சவாலுக்கு முகம் கொடுக்ககூடிய ஒரு சமூகத்தை உருவாக்க முடியாது போய்விடும்.

இன்றைய நவீன உலகிற்கு ஏற்ற வகையில் சிறந்த விழுமியத்துடன் கூடிய நற்பிரஜைகளை உருவாக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோர், ஆசிரியர் சமூகம் போன்ற அனைவரது கடமையாகும். அதற்கான பல உதவிகளை காப்போம் தொண்டு நிறுவனம் செய்து வருகின்றது என்றார்.

பொலிஸாரால் மாத்திரம் போதைப்பொருளை கட்டுப்படுத்த முடியாது;

# மக்களின் பூரண ஒத்துழைப்பும் வேண்டும்

## வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீர சூரிய

■ நிதர்சன் வினோத்



பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, வட மாகாண ஆளுநரின் அனுசரணையுடன் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருளை கட்டுப்படுத்தும் வேலை திட்டம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீர சூரிய தெரிவித்தார்.

தற்பொழுது, வடக்கு மாகாணத்தில் அனைவராலும் பேசப்படுகின்ற விடயமாக போதைப்பொருள் விடயம் காணப்படுகிறது. பொலிஸாராகிய நாம், வடக்கு மாகாணத்தில் போதை ஒழிப்பு செயற்பாட்டுக்கு பல்வேறுபட்ட முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். அதாவது, பாடசாலைகளில் விழிப்புணர்வு செயற்பாடு, தனியார் வகுப்புகள் மற்றும் பாடசாலைகளில் சோதனை நடவடிக்கைகள் போன்றன முன்னெடுக்கப்படுகின்றன.

பொலிஸாரால் மாத்திரம் போதைப்பொருளை கட்டுப்படுத்த முடியாது. குறிப்பாக, வடக்கில் உள்ள மக்கள், வடக்கில் போதைப்பொருளை கட்டுப்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். அதாவது, உங்களுடைய பிள்ளைகள் எதிர்காலத்தில் வைத்தியர், பொறியியலாளர் என உயிர்நிலைக்கு வரவுள்ளார்கள். அவ்வாறான ஒரு சமுதாயத்தை இந்தப் போதைப்பொருளுக்கு அடிமையாக விடுவது, பெரும் குற்றமான விடயமாகும். எனவே, வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் ஒழிப்புக்கு பொலிஸார் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றார்கள்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 61 பொலிஸ் நிலையங்களிலும் ஒவ்வொரு நாளும் போதைப்பொருளோடு தொடர்புடையவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். இவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோல சிவில் சமூகக்குழுக்களின் மூலம் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. அந்த ஒத்துழைப்பு மேலும் பல்மடங்கு தேவையாக உள்ளது. வடக்கு மாகாணத்தில் பொலிஸார் போதை ஒழிப்பிற்கு மாத்திரமல்லாது போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் சட்ட ஒழுங்கு நிலைநாட்டல் போன்ற பல்வேறுபட்ட செயற்திட்டங்களில் பொலிஸார் ஈடுபடுவதாகவும் மேலும் தெரிவித்தார்.

அடையாளம் தெரியாத வயோதிபர்

# யானை தாக்கி பலி

■ எச்.எம்.எம் பர்ஸான்



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புணானை பகுதியில் நேற்று (07) காலை, யானை தாக்கி நபரொருவர் மரணமடைந்து உள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணமடைந்தவர் 60 வயது மதிக்கத்தக்கவர் என்றும், இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



# திருப்பெருந்துறையில் கும்பாபிஷேகம்

திருப்பெருந்துறை விமான நிலைய வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சனீஸ்வர பகவான் ஆலயம் மற்றும் நூதன எழுந்தருளிய பஞ்சமுக ஆஞ்சநேயர் சுவாமிகள் திருவுருவச்சிலை ஆகியவற்றுக்கான கும்பாபிஷேகம் மற்றும் ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வசந்த மண்டபம், மணிக்கோபுரம் என்பவற்றின் திறப்பு விழா என்பன நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, ஆஞ்சநேயர் மூல நட்சத்திரமாகிய 23.12.2002 வெள்ளிக்கிழமை நிறைவுறவுள்ளது.

> **சனீஸ்வர பகவான் ஆலயம் மற்றும் நூதன எழுந்தருளிய பஞ்சமுக ஆஞ்சநேயர் சுவாமிகள் திருவுருவச்சிலை ஆகியவற்றுக்கான கும்பாபிஷேகம்**

எண்ணெய்க்காப்பு: சனிக்கிழமை (10) காலை 6:30 தொடக்கம் மாலை 5 மணி வரை. கும்பாபிஷேகம்: ஞாயிற்றுக்கிழமை (11) காலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.

# கீரைத்தூள் கஞ்சி



■ நூருல் ஹுதா உமர்

போசாக்கு உணவு திட்டத்தின் கீழ், கல்முனை ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி பிரிவால், கீரை வகைகளை அரைத்து உருவாக்கப்பட்ட தூள் மூலம் இலைக் கஞ்சி தயாரிக்கப்பட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவு தலைவர்களுக்கு பரிசோதனைக்காக வழங்கப்பட்டது.

போசாக்கு மட்டம் குறைந்த பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட இந்த தூளில் எந்த ஒரு செயற்கை நிறமூட்டிகளோ சுவையூட்டிகளோ சேர்க்கப்படாமல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்க தரப்பு, அரச சார்பற்ற நிறுவனங்கள், நன்கொடையாளர்கள் போன்றோரிடமிருந்து நிதி கோரப்பட்டுள்ளது என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் ரிபாஸ் தெரிவித்துள்ளார்.

நாவிதன்வெளி பிரதேச சபையில்

# மின்குமிழ் சர்ச்சையால் இழுபறி



■ பாறுக் ஷிஹான்

மக்களது தேவை குறித்து புதிய வரவு செலவு திட்டமானது சமர்ப்பிக்கப்படவில்லை என பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்ததை தொடர்ந்து, குறித்த வரவு செலவு திட்டத்தை திருத்தத்துடன் மீண்டும் சமர்ப்பிப்பதாக நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் அமரதாஸ ஆனந்த தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச சபையின் 58 ஆவது அமர்வு, ஆரம்பமான நிலையில் 2023 ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது, மின்குமிழ் தொடர்பில் எழுந்த சர்ச்சை காரணமாக வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்ட நிலையில், தவிசாளரால் டிசெம்பர் 20 ஆம் திகதி வரை சபை ஒத்திவைக்கப்பட்டது.

தவிசாளர் சபையை விட்டு வெளியேறியதால் சபை நடவடிக்கைகள் நிறைவடைந்தன.

# காற்று தரக் கண்காணிப்பு நிலையம் பழைய பூங்காவில் திறப்பு




■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணம், பழைய பூங்காவில் நிறுவப்பட்ட சுற்றுப் புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையம் நேற்று (07) காலை திறந்து வைக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் இலங்கைக்கான உலக சுகாதார நிறுவனத்தின் நிதியுதவியுடன், சுற்றுப் புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையம் யாழ்ப்பாணம் மாநகர சபையால் நிறுவப்பட்டது.

இதன் நினைவுக்கல்லை யாழ். மாநகர மேயர் வி. மணிவண்ணன் திறந்து வைத்ததுடன் காற்று தரக் கண்காணிப்பு நிலைய பொறிமுறையை சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் அனில் ஜயசிங்ஹ ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் , மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ் பத்திரகே, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் பி. ஹேமந்த ஜெயசிங்கே, உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி வேர்கிங் மல்லவராச்சி, யாழ் மாவட்ட மேலதிக செயலாளர் ம. பிரதீபன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவி பணிப்பாளர் து. சுபோகரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டிலீப் லியனகே, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ். மாநகர ஆணையாளர் இ.த ஜெயசீலன் உட்பட மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழ். பல்கலை சூழலில் 'தறுதலை'கள் மாணவிகளுடன் சேட்டை

## சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்பு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவிகளுடன், பாலியல் ரீதியான சேட்டைகளில் ஈடுபடும் தறுதலைகளுக்கு எதிராக, கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் தமது கற்றல் செயற்பாடுகளை முடித்துக்கொண்டு விடுதிகள், வாடகை அறைகளில் தங்கியுள்ள மாணவிகள், தமது தங்குமிடத்துக்குத் திரும்பும் வேளைகளில், பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள வீதிகளில், அநாவசியமாக கூடி நிற்கும் தறுதலை கும்பல்கள், மாணவிகளை இலக்கு வைத்து ஆபாச வார்த்தைகளால் பேசுதல், அந்தரங்க உறுப்புகளைக் காட்டுவது, ஆபாசமாக சைகைகளை காட்டுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில், 300 மாணவிகள் கையொப்பம் இட்டு, பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அண்மையில் முறையிட்டு இருந்தனர். பல்கலைக்கழகத்துக்கு வெளியே இவ்வாறான செயற்பாடுகள் நடப்பதால், மாணவிகளால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்து உள்ளத்துடன், பல்கலைக்கழக சூழலில் சிவில் உடைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில்

# மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் குழந்தைகளுக்கான முக்கிய சில மருந்து வகைகள் மற்றும் மாதாந்த கிளினிக் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கான மருந்து வகைகள் இல்லையென மாவட்ட வைத்தியசாலை தகவல்கள் மூலம் அறியமுடிந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகளிலும் நோயாளர்களுக்கான சில மருந்துகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. நாளாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவிலும் உள்நோயாளர் பிரிவிலும் சிகிச்சை பெற்று வரும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில், தற்போது குழந்தைகளுக்கான பாணி மருந்து வகைகள் மற்றும் மாதாந்த சிகிச்சை நோயாளர்களுக்கான கூடுதலான மருந்து வகைகள் இல்லாத நிலையில், சிகிச்சைக்கு செல்லும் நோயாளர்களுக்கு, குறித்த மருந்துகளை வெளியிடங்களில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

> **கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பின் தங்கிய கிராமங்களில், வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்கள், தங்களுக்கான மருந்துகளை தனியார் வைத்தியசாலைகளில் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்**

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பின் தங்கிய கிராமங்களில், வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்கள், தங்களுக்கான மருந்துகளை இவ்வாறாகத் தனியார் வைத்தியசாலைகளில் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# நிமோனியாவால் சிறுமி உயிரிழப்பு

■ செந்தூரன் பிரதீபன்

காய்ச்சல் காரணமாக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சிறுமி, நேற்று (07) மதியம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

கதிரிப்பாய், வாகையடி, அச்சுவேலி பகுதியை சேர்ந்த றெஜீஸ்வரன் சுசானா வயது 5 என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். நிமோனியா காய்ச்சலால் சிறுமி உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

# “பொறுத்தது போதும் வீதிக்கு இறங்குவோம்”

ஆ.ரமேஸ்

‘பொறுத்தது போதும் வீதிக்கு இறங்குவோம்’ எனும் தொனியில் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டணி, இம்மாதம் 8ஆம் திகதி நுவரெலியா நகரில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக, இன்று (08) பிற்பகல் 02 மணிக்கு வீதிக்கு இறங்கி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

மாவட்ட, பிரதேச ரீதியாக முன்னெடுக்கப்படவுள்ள இப்போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் நுவரெலியாவிலும் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக இக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் தேசிய அமைப்பாளர் வை.மகேந்திரன் தெரிவித்தார்.

## விபத்துக்கு உள்ளானவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை

நீலமேகம் பிரசாந்த்

அக்கரப்பத்தனை, டொரிங்டன் ஸ்டெயார் பிரிவில் அண்மையில் உரம் ஏற்றி சென்ற டிரக்டர் வாகனம் விபத்துக்குள்ளானதில் மூன்று தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உரிய நட்ட ஈட்டை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர் ராமன் கோபாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று பார்த்ததுடன், மூவருக்கும் உரிய நட்ட ஈட்டை குறித்த தோட்ட கம்பனி வழங்குவததற்கான நடவடிக்கையையும் எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே, விரைவில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நட்ட ஈட்டை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென ராமன் கோபாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

## பாதையோரங்களில் கைவிடப்பட்டுள்ள மின்கம்பிகள்



மொஹொமட் ஆஸிக்

இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான பல இலட்சம் ரூபாய் பெறுமதியுள்ள மின் கம்பிகள் பாரிய அளவில் பாதை ஓரங்களில் கைவிடப்பட்டுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டி மாவட்டத்தின் பல இடங்களில் இவ்வாறு மின்கம்பிகள் பாரிய அளவில் கைவிடப்பட்டுள்ளதுடன், அவை வீணாகி வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த மின்கம்பிகளைப் பயன்படுத்த முடியாவிடின் அவற்றை ஏலத்தில் விட்டு, வருமானத்தை இலங்கை மின்சார சபை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஹொரன பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிரான

# தொழிற்சங்க நடவடிக்கை வெற்றி

எஸ்.கணேசன்

தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுசெயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தலைமையிலான இ.தொ.காவினரால் ஹொரண பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கடிக்கை வெற்றியளித்துள்ளது.



ஹொரண பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களுக்கு கடந்த காலங்களில் விஜயம் மேற்கொண்டிருந்த இ.தொ.காவின் பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் அங்கு தொழிலாளர்கள் மீது நடத்தப்படும் கெடுபிடிகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

பின்னர், இந்த நிர்வாகத்திற்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்ததுடன், ஒரு கிலோ தேயிலைத்தூளை கூட வெளியில் கொண்டு செல்ல அனுமதிக்கவில்லை.

இதனையடுத்து, குறித்த பிரச்சினைகள் தொடர்பில் ஹட்டன் தொழில் திணைக்களத்தில் மேலதிக தொழில் ஆணையாளர் தலைமையில், இ.தொ.காவுக்கும் ஹொரண பெருந்தோட்ட நிர்வாகத்தினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதன்போது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ஹொரண பெருந்தோட்ட நிர்வாகத்தினர் சாதகமான பதில்களை வழங்கியதையடுத்து, தொழிற்சங்க நடவடிக்கையும் கைவிடப்பட்டுள்ளது.




## நவீன காலத்திலும் மின்சாரமின்றி வாழும் கொண்டக்கலை தோட்ட மக்கள்

நவி

அதிக சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் லூல்கந்துர- கொண்டகலை தோட்டத்துக்கு இதுவரை மின்சார வசதி செய்துகொடுக்கப்படவில்லை என்பதுடன், எவ்வித அபிவிருத்தி திட்டங்களும் இத்தோட்டத்தில் முன்னெடுக்கப்படவில்லை.

இத்தோட்ட மக்கள் கடந்த 45 வருட காலமாக மின்சார வசதிகள் இன்றி பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்,



தற்போது மண்ணெண்ணெய் பிரச்சினையால் இரவு நேரங்களில் மெழுகுவர்த்தி ஒளியில் இம்மக்கள் வாழ வேண்டிய நிர்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாக பல அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தாலும் இதுவரை இவர்களுக்கான மின்சாரம் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

## ‘மலையகம் 200’ நிகழ்வுகள்

எஸ்.கணேசன்

மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வருகைதந்து 2023 ஆம் ஆண்டுடன் இரு நூறு வருடங்களாகும் நிலையில், அதனை முன்னிட்டு ‘மலையகம் 200’ எனும் தொனிப்பொருளின்கீழ் பல்வேறு நிகழ்வுகளை நடத்துவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக இ.தொ.காவின் பிரதித் தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான கணபதி கணகராஜ் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்களாகபோகிறது. இதனையொட்டி பிரதேச, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பல நிகழ்வுகளை நடத்துவதற்கு காங்கிரஸ் தீர்மானித்துள்ளது என்றார்.

நோர்வூட் பிரதேச சபையில்

## ஐந்தாண்டுகால திட்டங்கள் தோல்வி

### என்கிறார் பிரதேச சபை உறுப்பினர் இராமச்சந்திரன்



நோர்வூட் பிரதேச சபையில் உள்ள கோப்புகள் அழகாகவும், நேர்த்தியாகவும் உள்ளன. ஆனால் ஐந்தாண்டு கால சபை செயற்பாடுகள் தோல்வி என நோர்வூட் பிரதேச சபையின் அமர்வில் வட்டார உறுப்பினர் மு.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

நோர்வூட் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு கூட்டம் நேற்று முன்தினம் (06) நோர்வூட் பிரதேச சபையின் டின்சின் மண்டபத்தில் சபையின் தவிசாளர் ரவி குழந்தை வேலு தலைமையில் நடைபெற்றது. இதன்போது, தவிசாளரால் சபையில் முன்வைக்கப்பட்ட 2023ஆம் ஆண்டிற்கான பாதீட்டு அறிக்கைக்கு எதிர்ப்பைத் தெரிவித்து பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

சபையின் ஆயுட்காலம் முடிவடையும் இத் தருணத்திலும் வருமானம் இல்லை என்றே கூறிக்கொண்டு இருக்கின்றீர்கள் ஆனால் நான் வருவாயை பெறும் எத்தனையோ பிரேரணைகளை முன்வைத்த போது அதை நீங்கள் கண்டுகொள்ளவில்லை என்றார்.

80 இலட்சம் ரூபாய் பெறுமதியான

## புத்தர் சிலையுடன் மூவர் கைது



ராமு தனராஜா

80 இலட்ச ரூபாய் பெறுமதியான பழைமையான புத்தர் சிலையுடன் மூவர், கந்தகெட்டிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புத்தர் சிலையொன்று விற்பனைக்காக வீடொன்றில் வைக்கப்பட்டிருப்பதாக, கந்தகெட்டிய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, கந்தகெட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் தஸநாயகவின் ஆலோசனைக்கு அமைய, இரண்டு பொலிஸார் சிலையை கொள்வனவு செய்யும் நபர்கள் போன்று, குறித்த வீட்டுக்கு சென்று, சிலையை பரிசோதிக்க வேண்டும் என கூறிய போது, சந்தேக நபர்கள் சிலையை கொடுத்துள்ளனர்.

இதன்போது ஏனைய பொலிஸாரால் குறித்த வீடு சுற்றிவளைக்கப்பட்டதுடன், 46,41,26 வயதுடைய மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மூவரையும் இன்று (08) பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.



## பித்தளைப் பொருட்களை திருடியவர்கள் கைது

ராமு தனராஜா

பசறை, மவுசாகல பகுதியில் பூட்டியிருந்த வீட்டை உடைத்து, பித்தளைப் பொருட்கள் மற்றும் பழைமையான வானொலி பெட்டி என்பவற்றைத் திருடிய இருவர் பசறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அதே பகுதியைச் சேர்ந்த 49 மற்றும் 54 வயதுடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், சந்தேக நபர்கள் இருவரையும் பசறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.




## பாதுகாப்பான இணைய பயன்பாடு குறித்த செயலமர்வு

பாதுகாப்பான இணைய பாவனை தொடர்பாக இன்டர்நியுஸ் ஸ்ரீ லங்கா முன்னெடுத்துவரும் டிஜிட்டல் பாதுகாப்பு பயிற்சிப்பட்டறை நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக, இச்செயலமர்வு கடந்த 26ஆம் திகதி ஹட்டனில் நடைபெற்றது. இதில் போர்டைஸ் இளைஞர் கழகத்தின் பெண் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஸ்ரீ லங்கா யுனைட்டின் நுவரெலியா மாவட்ட பெண் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இன்டர்நியுஸ் ஸ்ரீ லங்காவின் முழுமையான நிதி பங்களிப்பில் நடைபெற்ற இச்செயலமர்வை, அரோவ் எயிட் நிறுவனம் ஒழுங்கமைத்திருந்தது.

> “ பெண்கள் கருத்திற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள், பாதுகாப்பான தொடர்பாடல் வழிமுறைகள்…

இச்செயலமர்வின் வளவாளராக, இன்டர்நியுஸ் பாதுகாப்பான சகோதரிகள் செயற்றிட்டத்தின் புலமைப்பரிசில்தாரியும் ஊடகவியலாளருமான கலாவர்ஷ்னி கனகரட்ணம் கலந்துகொண்டார்.

இணையப் பாவனையின் போது அதிகமாக இலக்குவைக்கப்படும் தரப்பினராக பெண்கள் காணப்படும் நிலையில், அவர்கள் கருத்திற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள், பாதுகாப்பான தொடர்பாடல் வழிமுறைகள் என்பன குறித்து இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

# “மதுபானசாலைக்கான அனுமதிபத்திரத்தை இரத்துச் செய்”

### கொத்மலையில் ஆர்ப்பாட்டம்



ரஞ்சித் ராஜபக்ஷ

கொத்மலை பிரதேசத்தில் புதிதாக மதுபானசாலையொன்றை திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேசவாசிகளால் நேற்று (7) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தலவாக்கலை- பூண்டுலோயா பிரதான வீதியின் கொத்மலை, வெவஹேன சந்தியில் புதிதாக மதுபானசாலை திறப்பதற்கு கலால் திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேசவாசிகளால் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலையீட்டுடன் இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

கொத்மலை பிரதேச மக்கள் விவசாயம், தேயிலை உற்பத்தியால் வாழ்வாதாரத்தை நடத்தி வருவதாகவும் வெவஹேன சந்தியில் புதிதாக மதுபானசாலையை திறப்பதால், தாம் பொருளாதார ரீதியில் மேலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் என்றும் எனவே இந்த மதுபானசாலைக்கான அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

# ‘ஷொக்’ அடிக்கக் காத்திருக்கும் மின்கட்டண அதிகரிப்பு

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் அல்லது நாளாந்த மின்வெட்டு நேரம் 6 முதல் 8 மணித்தியாலங்கள் வரை நீடிக்கப்பட வேண்டிவரும் என எரிபொருள் மற்றும் மின்சக்தி அமைச்சர் நாடாளுமன்றத்தில் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

ஒரு மின் அலகுக்கான கட்டணம் 56.9 ரூபாயாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பது அவரின் பரிந்துரையாக அமைந்திருந்ததுடன், அடுத்த ஆண்டில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவையிடமிருந்து அனுமதியும் கிடைத்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையில் மின்சாரக் கட்டணம் 300 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டது. அதாவது முன்னர் சாதாரணமாக 4,000 ரூபாய் மாதாந்த மின்பட்டியல் பெற்றவர்களுக்கு தற்போது 9,000 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. அவ்வாறு மின்கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும், தினசரி தடங்கலின்றி, மின்வெட்டு அமல்படுத்தாமல் மின்விநியோகத்தை மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் 2023ஆம் ஆண்டில் ஜனவரி மற்றும் ஜுன் மாதங்கள் என இரு கட்டங்களில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடமிருந்து இதற்கான அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை என்பதுடன், மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கான தேவை தற்போது இல்லை எனவும் அந்த அமைப்பின் தவிசாளர் ஜனக ரத்நாயக்க ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்திருந்தார்.

சமூக வலைத்தளங்களில் இந்த விடயம் பற்றி பரவலாக பேசப்படுவதுடன், மின்சார சபை ஊழியர்களுக்கு வழங்கப்படும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள், போனஸ் கொடுப்பனவுகள், மிகையான வாகன பராமரிப்புச் செலவுகள் போன்றவற்றுக்கே இந்த மின்கட்டண அதிகரிப்பு அவசியமாக அமைந்துள்ளது போன்றவாறான கருத்துகளும் காணப்பட்டன.

இலங்கையில் மின்சார உற்பத்தியில் மோசடிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் அண்மையில் பல தரப்புகளால் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. குறிப்பாக, தனியார் துறையிடமிருந்து (தனியார் மின் உற்பத்தி நிலையங்கள்) மின்சாரத்தைக் கொள்வனவு செய்கையில் அவற்றுக்கு அளவுக்கதிகமாக கட்டணம் செலுத்துவது தொடர்பில் சர்ச்சைகள் அண்மையில் இடம்பெற்ற கோப் குழு சந்திப்பின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான கொள்வனவுகளை இடைநிறுத்துவதில் தாமதங்கள் காணப்படுவதுடன், மின்கட்டணத்தை உயர்த்துவதே ஒரே தீர்வு அல்லது இருளில் மூழ்கும் என அமைச்சர் கருத்துத் தெரிவிக்கும் முன்னர், இவ்வாறு அளவுக்கதிகமாக கட்டணம் செலுத்தி மின்சாரத்தைக் கொள்வனவு செய்வது மற்றும் அந்தத் தரப்பினருடன் மீளக் கலந்துரையாடி இந்தக் கட்டணங்களை சாதாரணமான நிலைக்கு கொண்டுவருவது பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றனவா? அல்லது இதன் பின்னணியிலும் அரசியல் செல்வாக்குகள் காணப்படுகின்றனவா எனும் கேள்விகளும் இல்லாமல் இல்லை.

பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாடும் பொது மக்களுக்கு நிம்மதியாக வாழவிடுவதற்கு பதிலாக, சுமை மேல் சுமையேற்றுவதையே இந்த அரசாங்கம் மேற்கொள்ள முனைகின்றது.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

மனிதரை மனிதர் இரசிக்க வேண்டும். எவரையும் கண்டுகொள்ளாமல், மதிக்காமல், பழகாமல் கண்களை மூடிக்கொண்டு வாழக்கூடாது.

இந்த உலகத்தில்தான் வாழுகின்றோம். வேற்றுக்கிரகத்தில் இருந்து வரவில்லை. வெளிநாடுகளில், காலை நேரத்தில் எவரைக் கண்டாலும் கையசைத்து, ‘ஹாய்’ என்று அவர்களைப் பார்த்து, புன்முறுவலுடன் கூறுவார்கள்.

ஆனால், எங்கள் சனங்கள், தங்களுக்குத் தெரியாதவர்களை முழுமையாக நிராகரித்துவிடுவார்கள். எவரையும் நிராகரித்தால், வெறுக்கும் மனநிலைக்கே தள்ளப்பட்டுவிடுவார்கள்.

ஆனால், பொல்லாத கெட்டவர் என்று தெரிந்தால் கண்டுகொள்ளாமல் போகலாம். ஒருவரைப் புரியாமல் நட்புக்கொள்ளவும் கூடாது. பஸ்ஸில் ஒருதடவையில் பார்த்ததுமே, காதல் கொள்வது சரிவருமா? முழுமையான காதலா இது?

துஷ்டர்கள் காதல் எனும் பெயரில் நடித்து, வலை வீசுகிறார்கள். பல இளைய தலைமுறையினர் எதையும் ஆராய்வதில்லை. பிறர் புத்திமதிகளைக் கேட்பதுமில்லை.

பொதுமைப் பண்பாடுகளில் இருந்து விலகலாகாது. மனிதனை மனிதன் அன்பு செலுத்த வேண்டும். புவனத்தில் பிறக்கும் குழந்தைகள், நற்குணத்துடன் தான் பிறக்கின்றன. அவர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தவேண்டும்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சமூக சேவை உத்தியோகத்தருக்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பங்களுக்கு நடந்தது என்ன?

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் சமூக சேவை உத்தியோகத்தருக்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பம் கோரப்பட்டு, இதுவரை பரீட்சை நடைபெறவில்லை என விண்ணப்பதாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

2021ஆம் ஆண்டு போட்டிப் பரீட்சை தொடர்பில் விண்ணப்பம் கோரப்பட்ட நிலையில், தற்போது வரை ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையில், சமூக சேவை உத்தியோகத்தர் நியமனம் தொடர்பிலான எவ்வித அறிவித்தல்களோ போட்டிபரீட்சை நடத்துவது தொடர்பான அறிவித்தல்களோ, முன்வைக்கப்படவில்லை எனவும் பரீட்சார்த்திகள் தெரிவிக்கின்றனர்.

உரிய பரீட்சைக்காக கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுடன் விண்ணப்பித்து, சுமார் ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களை முன்வைத்து, விண்ணப்பம் கோரப்பட்டாலும் பரீட்சை நடத்தப்படவில்லை.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் திறந்த போட்டிப் பரீட்சைக்கே இவ்வாறு சமூக சேவை உத்தியோகத்தருக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இது தொடர்பில், உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு குறித்த போட்டிப் பரீட்சையை நடத்தி, நியமனம் செய்யுமாறு பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஹஸ்பர்

### பாராளுமன்றத்தில் டெலோவின் ‘சொப்பன சுந்தரி’ உரை:

# தன்னிலை மறந்த மனநிலையில் தமிழ் மக்களுக்கு தலைமையேற்க முடியுமா?



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா) கடந்த வாரம் பாராளுமன்றத்தில் ‘சொப்பன சுந்தரி’யை உதாரணமாக முன்வைத்து ஆற்றிய உரை கவனம் பெற்றிருக்கின்றது.

நாட்டின் பிரதான துறைமுகங்களை அரசாங்கம், சீனாவுக்கு தரைவார்த்து வருவது தொடர்பாக கேள்வி எழுப்பி உரையாற்றும் போதே, அவர் ‘சொப்பன சுந்தரி’ விடயத்தைத் தொட்டார்.

‘கரகாட்டக்காரன்’ திரைப்படத்தில் நடிகர்கள் கவுண்டமணி - செந்தில் தோன்றும் ஒரு காட்சியில், ‘சொப்பன சுந்தரி’ எனும் நடிகை குறித்து இரண்டாந்தரமாகப் பேசுவார்கள். அதாவது, ‘சொப்பன சுந்தரி’ வைத்திருந்த காரை (வாகனம்), தான் வைத்திருப்பதாக கவுண்டமணி கூற, ‘சொப்பன சுந்தரி’யை யார் வைத்திருக்கிறார் என்று செந்தில் கேட்பார். இப்படியாக அந்தக் காட்சி நீளும். இதனை, மிகப்பெரிய நகைச்சுவைக் காட்சியாக, ‘தமிழ் கூறும் நல்லுலகம்’ இன்றளவும் கொண்டாடி வருகிறது.

ஒரு பெண்ணை, அந்தப் பெண்ணுக்குரிய தார்மீகம், உரித்துகள் என்பவற்றை உணராமல், கார் போன்ற ஒரு சொத்தோடு ஒப்பிட்டுப் பேசும் மனநிலை என்பது, மிகவும் பிற்போக்குத்தனமானது. அதுவும், பலர் பாவித்த காரோடு, ஒரு பெண்ணை ஒப்பிடுவதும், அதை நகைச்சுவையாகக் கொண்டாடித் தீர்ப்பதும், மனநிலை பிறழ்வுள்ள சமூகமே செய்யும்.

மனிதன், பெண்களை சொத்தாகவே வரலாறு முழுவதும் கண்டு வந்திருக்கிறான். பெண்களை, சக மனுசியாக அவளின் உணர்வுகளை உரிமைகளை மதித்து நடக்கும் நிலை குறித்துச் சிந்திக்கத் தொடங்கியது என்பது சில காலமாகத்தான்.

ஆனாலும், இன்னமும் ஆதிகாலத்துச் சிந்தையோடும் ஆணாதிக்கத் திமிரோடும், ஒரு சமூகம் தன்னை நிலை நிறுத்திவிடும் என்று நினைப்பது படுமுட்டாள்தனமானது. அப்படியான நிலையில், மக்கள் பிரதிநிதி ஒருவர் ‘சொப்பன சுந்தரி’ விடயத்தை முன்வைத்து பேசுவதை எந்தக் காரணம் கொண்டும் ஏற்கமுடியாது.

கோவிந்தன் கருணாகரன், ‘சொப்பன சுந்தரி’ தொடர்பில் குறிப்பிட்டு பேசும் போது, “தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புன்முறுவல் பூத்துக்கொண்டிருந்தார். தன்னுடைய இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர், மிகவும் நகைச்சுவையாக ‘சொப்பன சுந்தரி’ குறித்துப் பேசுகிறார் என்று செல்வம் நினைத்திருக்கலாம்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினராக, இயக்கமொன்றில் தலைவராக, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவராக செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரனின் உரையை கண்டித்திருக்க வேண்டும். அல்லது, கோவிந்தன் கருணாகரனை மன்னிப்புக் கோரச் செய்திருக்க வேண்டும். ஆனால், தங்களின் நிலை மறந்து நின்று ‘பல்லிளிப்பது’ என்பது பெரும் சாபக்கேடு.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது, விடுதலை, சுயநிர்ணய உரிமை சார்ந்து எழுந்தது. அது, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குள் வரும் போது, சமத்துவம் என்கிற விடயத்தை தன்னோடு சேர்த்துக் கொண்டது.

சாதி மறுப்பு, பெண்கள் விடுதலை என்பன புலிகள் காலத்தில் எழுதப்படாத விதிகளாகவே கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. போர் முனைகளின் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு போரிடுவதற்காக மாத்திரமல்ல, அரசியல், நிர்வாக நடைமுறைகளின் போக்கிலும் பெண்களை முன்னிறுத்தி, புலிகள் செயற்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய அரசியல் பற்றிய இன்றைய தலைமுறையின் உணர்திறன் என்பது, புலிகள் காலத்தின் நீட்சிதான். அதாவது, தமிழ்த் தேசிய அரசியல் என்பது, மேலாதிக்க அடக்குமுறைகள் என்று நம்பப்படுகின்ற அனைத்துக்கும் எதிரானது. அதில், பேரினவாதத்துக்கு எதிரான விடுதலை மாத்திரமல்ல; ஆணாதிக்க, சாதிய மேலாதிக்க மனநிலைகளுக்கு எதிரான விடுதலையும் அடங்கும்.

தமிழ்த் தேசியத்தின் பெயரால் போலி வேடம் போடுபவர்களைத் தாண்டி, உண்மையான தேசிய உணர்வோடு இருப்பவர்கள் அதனை சிரமேற்று செயற்படுவார்கள். ஆனால், வாக்குகளுக்காக மாத்திரம் தமிழ்த் தேசியம் என்று பேசிவிட்டு, பதவிகளையும் சுகங்களையும் பெற்றுக் கொண்டுவிட்டவர்கள் ‘சொப்பன சுந்தரி’ குறித்துப் பேசுவது வியப்புக்குரியதல்ல.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ), தமிழ்த் தேசிய விடுதலையின் பெயரால் எழுந்தது. நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் விடுதலையின் பெயரால் அந்த இயக்கத்தில் இருந்து உயிரை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

ஆனால், ஒரு கட்டத்தில் விடுதலை என்கிற விடயத்தை மறந்து, சிங்கள பேரினவாதத்தின் ஒட்டுக்குழுவாக அது செயற்பட்டது. அப்போது, அந்த இயக்கம் வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் அரச படைகளோடு இணைந்து நின்று, தமிழ் மக்களுக்கு எதிராகப் புரிந்த குற்றங்கள் சொல்லிமாளாதவை.

உயிர்ப்பலி எடுப்புகள் தொடங்கி, பாலியல் வல்லுறவுகள் வரை, டெலோ இயக்கத்தின் மீது இன்றளவும் கழுவ முடியாத இரத்தக் கறைகள் இருக்கின்றன. அந்தக் குற்ற மனநிலை காலத்திலிருந்து, டெலோ இன்னமும் விடுபடவில்லையோ என்ற சந்தேகம் எழுகின்றது.

ஏனெனில், டெலோ இயக்கத்தைச் சேர்ந்த கூட்டமைப்பின் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினரான வினோ நோகதாரலிங்கம், கூட்டமைப்பை ‘விபச்சார வீடு’என்று மக்கள் சந்திப்பொன்றில் பகிரங்கமாகக் கூறியிருந்தார். தான் எந்தக் கட்சியில் இருந்து, பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டாரோ அந்தக் கட்சியையே, ‘விபச்சார வீடு’ என்று அழைப்பதை எவ்வாறு சகித்துக் கொள்ள முடியும்?

அவர், அப்படிப் பேசி இரண்டு மாதங்களாகின்றது. ஆனால், அவரோ, அவரின் கட்சித் தலைவரோ இதுவரையில் அதற்கான விளக்கத்தை அளிக்கவில்லை. குறைந்த பட்சம் மன்னிப்பையாவது கோரவில்லை. மாறாக, டெலோவின் அடுத்த பாராளுமன்ற உறுப்பினர், ‘சொப்பன சுந்தரி’ குறித்துப் பேசும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியத்தின் பெயரால், மக்களின் ஆதரவைப் பெற்று, பாராளுமன்ற உறுப்பினராகவோ, மாகாண சபை உறுப்பினராகவோ அல்லது பிரதிநிதியாகவோ இருக்கின்றவர்கள், தங்களின் நிலை குறித்து, நன்கு அறிந்தும் உணர்ந்தும் செயற்பட வேண்டும். இல்லாது, குடிகாரர்கள், மனநிலை தவறியவர்கள் போன்று கண்டதையெல்லாம் பொது வெளியில் பேச முடியாது. அப்படி அவர்கள் பேசினால், அது தமிழ் மக்களின் தலைகளிலேயே எழுதப்படும். ஏனெனில், இவ்வாறானவர்களை தேடிப் பிடித்து வாக்களித்து வெற்றிபெற வைத்தவர்கள் தமிழ் மக்களே!

கோவிந்தன் கருணாகரன், பாராளுமன்றத்தில் ‘சொப்பன சுந்தரி’ குறித்து பேசிய விடயம், எழுந்தமானமாக நிகழ்ந்தது அல்ல. அவர் தன்னுடைய உரையை தெளிவாக எழுதி எடுத்து வந்தே பேசினார். அந்த உரையை உண்மையிலேயே அவர்தான் தயாரித்தாரா அல்லது இன்னொருவர் தயாரித்துக் கொடுத்தாரோ தெரியாது. ஆனால், அந்த உரையாற்றப்படுவதற்கு முன்னர், அந்தப் பிரதியை ஒருமுறையாவது அவர் வாசித்து, அதனை விளங்கிக் கொண்டிருந்தால் இவ்வாறான இரண்டாந்தர உதாரணம் வந்திருக்காது. எழுதி வாசித்த உரையில் கூட கவுண்டமணி - செந்தில் என்பதற்குப் பதிலாக, நகைச்சுவை நடிகர் வடிவேலு தோன்றும் காட்சி என்று வேறு அவர் வாசித்தார்.

பாராளுமன்ற அமர்வுகளில் பார்வையாளர்களாக மாணவர்கள், இராஜதந்திரிகள் தொடங்கி, பல தரப்பினரும் பங்கெடுப்பது வழக்கம். அதுவும், தற்போது, பாராளுமன்ற அமர்வுகள் நேரடியாக ஒளிபரப்பாகின்றன. அப்படியான நிலையில், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் தாங்கள் என்ன பேசுகிறோம், என்ன மாதிரியாக நடந்து கொள்கிறோம் என்பது குறித்து புரிதல் வேண்டும். அதனைவிடுத்து, தன்னிலை மறந்து செயற்படுவது என்பது அபத்தமானது.

டெலோ இயக்கம் கூட்டமைப்புக்குள்ளும் தமிழ்த் தேசிய அரசியல் களத்திலும் தன்னை முதலிடத்தில் முன்னிறுத்த முயன்று வருகின்றது. ஒரு கட்சியாக, இயக்கமாக முதலிடத்தை நோக்கி இயங்குவது என்பது அவசியமான ஒன்று.

ஆனால், அந்தக் கட்டத்தில் எவ்வாறான பொறுப்புணர்வோடு இயக்கவேண்டும் என்பது குறித்து, குறைந்த பட்ச சிந்தனையாவது வேண்டும். இல்லாது செயற்பட்டால், ‘விபச்சார வீடு’, ‘சொப்பன சுந்தரி’ போன்ற கீழ்த்தரமான உரையாடல்கள் நிகழ்த்தப்படுவது தவிர்க்கப்படாது.

இவ்வாறான மனநிலையோடு இருந்து கொண்டு, தமிழ் மக்களுக்கு தலைமையேற்க நினைப்பது அபத்தமானது. குறைந்த பட்சம், இவ்வாறான தவறுகளை டெலோ இனியாவது தவிர்க்க வேண்டும்.

கும்பகோணம்

# காவி உடை, விபூதியுடன் ‘அம்பேத்கர்’

சட்டமேதை அம்பேத்கரின் நினைவு தினம் நேற்று முன்தினம் (06) இந்தியர்களால் அனுசரிக்கப்பட்டது.

இதனையொட்டி பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அம்பேத்கரின் சிலை மற்றும் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிலையில் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில், இந்து மக்கள் கட்சி சார்பில், ஒட்டப்பட்ட போஸ்டரில் ‘காவி(ய) தலைவனின் புகழை போற்றுவோம்’ என எழுதப்பட்டிருந்ததோடு காவி உடை, விபூதி பூசி, குங்குமம் வைக்கப்பட்ட அம்பேத்கரின் உருவப்படமும் அச்சிடப்பட்டிருந்தது.




இப்போஸ்டரானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டன.

இதனையடுத்து இப்போஸ்டர் ஒட்டப்பட்டமை தொடர்பில் இந்து மக்கள் கட்சி மாநில பொதுச்செயலாளர் குருமூர்த்தியை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.




பஞ்சாப்

## குழந்தைகளை கடத்தும் ‘அம்புலன்ஸ்’

அம்புலன்ஸில் குழந்தைகளைக் கடத்தி, விற்பனை செய்து வந்த 7 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பஞ்சாப், சண்டிகர் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பஞ்சாப்பில் ஏழைப் பெற்றோர்களிடம் இருந்து குறைந்த விலைக்கு குழந்தைகளை வாங்கி, குழந்தைகள் இல்லாத தம்பதிகளுக்கு, ஒரு கும்பல் விற்பனை செய்து வருவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இச்சம்பவம் அம்பலமாகியுள்ளது,

இது தொடர்பில் தீவிர தேடுதலில் இறங்கிய பொலிஸார், பல்ஜிந்தர் சிங், அமந்தீப் கவுர், லலித் குமார், புபிந்தர் கவுர், சுஜிதா, ஹர்ப்ரீத் சிங், சுக்விந்தர் சிங் ஆகியோரைக் கைது செய்துள்ளனர்.

இதன்போது அவர்களிடம் இருந்து, புதிதாகப் பிறந்த இரண்டு குழந்தைகள், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட அம்புலன்ஸ், 4 இலட்சம் ரூபாய் பணம் என்பவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மும்பை

## நிர்வாணப் பட விவகாரம்; 5 லட்சம் ரூபாய் திருடிய சிறுமி



தனது நிர்வாணப் படத்தை இணையத்தில் வெளியிட்டு விடுவதாக காதலன் மிரட்டியதால், 12 வயதான சிறுமி, அவரது வீட்டில் 5 லட்சம் ரூபாயைத் திருடிய சம்பவம் மும்பையில் இடம்பெற்றுள்ளது.

தொழிலதிபரின் மகளான குறித்த சிறுமி, தனியார் பாசாலையில் கல்வி கற்று வந்துள்ள நிலையில் அமான் என்ற நபரைக் காதலித்து வந்துள்ளார்.

இதன்போது ஒருநாள் அமான் குறித்த சிறுமியை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று, அவருடன் தனிமையில் இருந்துள்ளதோடு, பின்னர் குறித்த சிறுமியை நிர்வாணமாகப் புகைப்படமும் எடுத்துள்ளார்.

நாளடைவில் குறித்த புகைப்படங்களை இணையத்தில் வெளியிட்டு விடுவதாக மிரட்டி அச்சிறுமியிடம் பணம் பறித்து வந்துள்ளார்.

அந்தவகையில், சுமார் 5 லட்சம் ரூபாய் மற்றும் தங்க நகைகளை தனது வீட்டில் இருந்து திருடி, சிறுமி அமானிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்நிலையில் தங்களுடைய வீட்டிலிருந்து கடந்த சில நாள்களாக நகைகள், பணம் காணாமல் போவதால் சந்தேகமடைந்த அச்சிறுமியின் பெற்றோர், இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையில், குறித்த சிறுமியை மிரட்டி அமான் பணம் மற்றும் நகைகளை பறித்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து போஸ்கோ சட்டத்தின் கீழ் அமானை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



புதுடெல்லி

## 33 வார கருவை கலைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

இந்திய சட்டத்தின்படி, கருவில் இருக்கும் குழந்தைகளின் ஆரோக்கிய நிலை மற்றும் கண்ணியமான வாழ்க்கை என்பவற்றைக் கருத்தில் கொண்டு, அதிக பட்சமாக 24 வாரங்கள் வரையிலான காலப்பகுதியில் கருக்கலைப்புச் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (06) விசாரணைக்கு வந்த, 33 வார கருவைக் கலைக்க அனுமதிக்குமாறு 26 வயதான திருமணமான பெண்ணொருவர் தொடுத்த வழக்கில், குறித்த கருவை கலைக்க நீதிபதி பிரதீபா எம். சிங்கின் அனுமதித்தார்.

இவ்வழக்கு விசாரணையின் போது, தான் கர்ப்பம் அடைந்த 30 வாரங்களுக்குப் பின்னரே, தனது கருவில் பெருமூளைக் கோளாறு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அக் குழந்தை பிறந்தால் பெரும் சவால்களை சந்திக்க நேரிடும். எனவே இந்நிலையைத் தவிர்க்க கருக்கலைப்பிற்கு அனுமதி வழங்குமாறு அப்பெண் கோரியிருந்தார்.

இந்நிலையில், ஒரு கர்ப்பிணியின் கர்ப்பத்தை கலைக்கும் உரிமை உலகம் முழுவதும் விவாதப் பொருளாக இருந்து வரும் நிலையில், இவ்வுரிமை பெண்ணுக்கு, தான் கருத்தரித்த குழந்தையைப் பெற்றெடுக்க விருப்பம் உள்ளதா, இல்லையா என்பது பற்றிய இறுதித் தெரிவை வழங்குகிறது.

மருத்துவ மருத்துவ அறிக்கையில் கருவில் உள்ள குழந்தையின் பாதிப்பு நிலை அதிகமாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளதால் குழந்தையின் கண்ணியமான வாழ்க்கையை கருத்தில் கொண்டு இக் கருவை கலைக்க நீதிமன்றம் அனுமதி அளிப்பதாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ராஜஸ்தான்

## நீர் பருகிய சிறுவன் உயிரிழப்பு



ராஜஸ்தானின் கரவுலி மாவட்டத்தில் கடந்த 3 ஆம் திகதி அசுத்தமான தண்ணீரைப் பருகிய 12 வயதான சிறுவனொருவன் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதேசமயம் குறித்த நீரைப் பருகிய 80 க்கும் மேற்பட்டோர் உடல் நலம் பாதிக்கப்பட்டு, வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

செவ்வாய்க்கிழமை (06) மாலை வரை மொத்தம் 86 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 54 பேர் வீடு திரும்பியுள்ளனர். 32 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## அடிக்கல் நாட்டுவிழா



கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில், திருமந்திர அரண்மனைக்கான அடிக்கல் நாட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்றது. இங்கு, கருங்கல்லில் பொறிக்கப்பட்ட 3,000 திருமந்திரப்பாடல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் 108 சிவலிங்கங்களும் பிரதிஸ்டை செய்யப்படவுள்ளன. அடிகல்லை, சிவ பூமி அறக்கட்டளை தலைவர் ‘செஞ்சொற்செல்வர்’ கலாநிதி ஆறு திருமுருகன், ஹவாய் தீவினுடைய ஆன்மீக சுடர் ரிஷி தொண்டனாதர் சுவாமி, கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வண்ணக்கமார், குடிகளின் அங்கத்தவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் கலந்துகொண்டு நட்டு வைத்தனர்.

வ. திவாகரன்

## யாழ். பல்கலைக்கழகத்தில் செய்தியறை



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், ‘ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறை’, செவ்வாய்க்கிழமை (06) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்படி செய்தியறை ஊடகக் கற்கைகள்துறை மாணவர்கள், ஒருசேரப் பயிற்சி பெறுவதற்கான வசதிகளையும் உபகரணங்களையும் கொண்டிருக்கும்.
ஜும்மா மசூதி வீதியில், யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஊடகக் கலையகம் அமைந்திருக்கும் வளாகத்தில் நிறுவப்பட்டிருக்கும் இந்தச் செய்தியறையை, துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைத்தார்.
இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக ‘ஹெல்வெற்றாஸ்’ கருத்திட்ட முகாமையாளர் சந்துலா கும்புகஹே, ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பேராசிரியர் எஸ். ரகுராம், இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்ற நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் மொஹமட் அசாத் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

சண்முகம் தவசீலன்





## ‘மனுஷி’ சிறுகதை நூல் வெளியீடு



சிரேஷ்ட ஊடகவியலாளரும் சுவிட்சர்லாந்தில் தமிழ் இலக்கியத் தளத்தில் இயங்கி வருபவருமான சண். தவராஜாவின் ‘மனுஷி’ சிறுகதை நூல் வெளியீடும் அறிமுக நிகழ்வும் மட்டக்களப்பு, பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று (07) நடைபெற்றது.
மட்டக்களப்பு மகுடம் கலை, இலக்கிய வட்டத்தின் இந்த நூல் வெளியீடு, பேராசிரியர் செ. யோகராசா தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எம். செல்வராஜா கலந்து கொண்டார்.
நூலின் நயவுரையை கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி வலண்டினா பிரான்சிஸ் நிகழ்த்தியதுடன் சிறப்புரையை ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் திருமதி சுதாகரி மணிவண்ணன் நிகழ்த்தினார்.

எம்.எஸ்.எம் நூர்தீன்




## சரித்திரம் படைத்த சாதனை மாணவர்களுக்கு கௌரவம்





சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய வரலாற்றில் முதல் தடவையாக க.பொ.த சா.தரப் பரீட்சையில் சாதனை படைத்த 49 மாணவர்களும் தேசிய ரீதியில் சாதனை படைத்த மூன்று மாணவிகளும் திங்கட்கிழமை (05) கல்லூரியின் காலை ஆராதனை நிகழ்வின்போது கௌரவிக்கப்பட்டார்கள்.
கல்லூரி அதிபர் நஜீபா ஏ ரஹீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை வலய கல்வி பணிமனையின் பிரதி கல்விப் பணிப்பாளர் அப்துல் மஜீத், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம் ஏ சபூர் தம்பி, உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.
30 மாணவர்கள் 9 ஏ சித்திகளையும் 19 மாணவர்கள் 8 ஏ, 7 ஏ சித்திகளையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்திருந்தார்கள்.

காரைதீவு சகா

## நீரிழிவு நோய் விழிப்புணர்வு




வவுனியா மருத்துவர் சங்கத்தின் ஏற்பாட்டில், வவுனியா வைத்தியசாலை முன்பாக நேற்று (07) காலை ஆரம்பித்த விழிப்புணர்வு நடை பயணம், கண்டி வீதி ஊடாக வவுனியா நகரை அடைந்து, இரண்டாம் குறுக்குத்தெரு, கந்தசாமி கோவில் வீதி, பசார் வீதி, மில் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி என்பவற்றினுடாக மீண்டும் வவுனியா வைத்தியசாலையை வந்தடைந்தது. மாவட்ட அரச அதிபர் பீ.ஏ சரத்சந்திர, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் எம். மகேந்திரன், மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், வைத்தியர்கள், தாதியர்கள், வர்த்த சமூகத்தினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

க. அகரன்

பிரித்தானியா

# மன்னர் சார்ள்ஸ் மீது மீண்டும் முட்டை வீச்சு


பிரித்தானிய மகாராணி 2ஆம் எலிசபெத்தின் மரணத்துக்குப் பின்னர் மன்னராக பதவியேற்றுள்ள 3ஆம் சார்ள்ஸ், நாடு முழுவதும் பயணம் செய்து, மக்களைச் சந்தித்து வருகிறார்.

இந்நிலையில், வடக்கு லண்டனில் இருந்து 46 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள லுட்டன் நகரத்துக்கு நேற்று முன்தினம் சென்ற(06) அவர், அங்குள்ள மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது எதிர்பாராத விதமாக கூட்டத்தில் இருந்து மன்னரை நோக்கி முட்டை வீசப்பட்டது.

இதனையடுத்து உடனடியாக மன்னரை வேறோர் இடத்துக்கு அவரது பாதுகாப்பு அதிகாரிகள் அழைத்துச் சென்றனர்.

இந்நிலையில், இச்சம்பவத்துடன் தொடர்புடைய நபரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மன்னர் மீது முட்டை வீசப்படுவது இது முதல் தடவை அல்ல.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மன்னர் சார்ள்ஸ் மற்றும்அவரது மனைவி ராணி கமிலா ஆகியோர் யோர்க் நகரத்துக்கு சென்றபோது, அவர்கள் மீது 23 வயதான இளைஞர் முட்டை வீசியிருந்தார் என்பது, பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான்

## அரச ஊழியர்களைக் குறிவைத்து வெடிகுண்டுத் தாக்குதல்

### 7 பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானின் வடக்கு பால்க் மாகாணத்தில் உள்ள மசார்-இ-ஷரிப் நகரில், நேற்று முன்தினம் (06) பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் பயணித்த பஸ்ஸைக் குறிவைத்து வெடிகுண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்துள்ளனர் எனவும், 6 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பஸ் உட்பட, வாகனங்கள் பல தீக்கிரையாகியுள்ளதோடு, அப் பகுதியில் இருந்த கடைகளும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத்தாக்குதலை ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினர் நடத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

முன்னதாக கடந்த மாத இறுதியில் மசார்-இ-ஷரிப் நகரில் உள்ள ஒரு மதரசாவில் நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர் என்பதும் நினைவு கூரத்தக்கது.



அமெரிக்கா

## விலங்குகளைக் கொன்று குவிக்கும் ஆராய்ச்சி

அதிகளவான விலங்குகளை ஆராய்ச்சி என்ற பெயரில் கொன்று குவித்து வருவதாக டெஸ்லா, நியூராலிங் மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும், அதன் தலைமை செயற்பாட்டு அதிகாரியுமான எலோன் மஸ்கின் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது.

எலோன் மஸ்கின் நியூராலிங்க் நிறுவனமானது 2018ஆம் ஆண்டு முதல் மனித மூளைக்குள் சிப் ஒன்றை பொருத்தி, அதனை கணினியுடன் இணைத்து, அதன் மூலம் கணினியுடன் நேரடி உரையாடலை ஏற்படுத்துவதற்கான பரிசோதனையை செய்து வருகிறது.

இப் பரிசோதனைக்காக இதுவரை செம்மறி ஆடுகள், பன்றிகள், குரங்குகள் என சுமார் 1,500க்கும் மேற்பட்ட விலங்குகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவை கடுமையாகத் துன்புறுத்தப்பட்டு உயிரிழப்புகளை சந்திப்பதாகவும் அந் நிறுவன ஊழியர்கள் புகார் அளித்துள்ளனர்.

இப் புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த அமெரிக்க அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தோனேசியா

## பொலிஸ் நிலையத்தில் வெடிகுண்டுத் தாக்குதல்



இந்தோனேசியாவின் பண்டங்க் நகரில் உள்ள பொலிஸ் நிலையத்தின் மீது நேற்று (07) மர்ம நபர் ஒருவரால் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


அப்பொலிஸ் நிலையத்தில், பொலிஸார் அணிவகுப்பு பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது அங்கு வந்த நபர் ஒருவர், திடீரென தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார்.

இத் தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 6 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 7 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் இத்தற்கொலைத் தாக்குதலை நடத்தியது யார்? ஏதேனும் பயங்கரவாத அமைப்பு இத் தாக்குதலின் பின்னணியில் உள்ளதா என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்கா

## சடலத்துக்குள் உயிருடன் இருந்த பாம்பு



பிரேத பரிசோதனையின் போது இறந்தவரின் உடலில் இருந்து பாம்பொன்று உயிருடன் வந்த சம்பவம் அமெரிக்காவில் நிகழ்ந்துள்ளது

ஜெசிகா லோகன் என்ற 31 வயதான பெண், பிரேத பரிசோதனை செய்யும் ஊழியராக பணியாற்றி வருகின்றார். இந்நிலையில், ஜெசிகா அண்மையில் தனக்கு நேர்ந்த அனுபவத்தை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகர்ந்துள்ளார்.

அதில் 'ஒரு முறை நான் சடலமொன்றை பிரேத பரிசோதனை செய்து கொண்டிருந்தபோது, அந்த உடலில் இருந்து உயிருடன் ஒரு பாம்பு வெளிவருவதைப் பார்த்தேன். பின்னர் இது குறித்து விசாரித்துப் பார்த்த போது, ஓடை ஒன்றுக்கு அருகில் அழுகிய நிலையில் குறித்த சடலம் கண்டெடுக்கப்பட்டது தெரியவந்ததாகவும், இதனால் குறித்த ஓடையில் இருந்தே அப் பாம்பு சடலத்துக்குள் புகுந்து இருக்கலாம் என தான் சந்தேகித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



உலகக் கிண்ணம்:

# மொரோக்கோவிடம் தோற்று வெளியேற்றப்பட்ட ஸ்பெய்ன்

### சுவிற்ஸர்லாந்தை வீழ்த்தி காலிறுதியில் போர்த்துக்கல்

கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரிருந்து ஸ்பெய்ன் வெளியேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மொரோக்காவுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் தோற்றே தொடரிலிருந்து ஸ்பெய்ன் வெளியேற்றப்பட்டுள்ளது.

இப்போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாததோடு, மேலதிக நேரத்திலும் கோலெதும் பெறப்படாத நிலையில் பெனால்டியிலேயே 3-0 என மொரோக்கோ வென்றிருந்தது. இதில் மொரோக்கோவின் கோல் காப்பாளர் யசீன் போனோ இரண்டு பெனால்டிகளைத் தடுத்திருந்தார்.

இதேவேளை, நேற்று (07) அதிகாலை நடைபெற்ற சுவிற்ஸர்லாந்துடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் 6-1 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிப் போட்டிக்கு போர்த்துக்கல் தகுதி பெற்றிருந்தது. போர்த்துக்கல் சார்பாக, கொன்ஸலோ றாமோஸ் மூன்று கோல்களையும், பெப்பே, ரஃபேல் குரைரோ, றஃபேல் லியோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். சுவிற்ஸர்லாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை மனுவல் அகஞ்சி பெற்றிருந்தார்.



கிளிநொச்சி, ஜெயபுரம் பாடசாலையில்

## அன்ரன் அல்பிரட் அருணை கௌரவிக்கும் நிகழ்வு

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

அகில இலங்கை ரீதியிலான பாடசாலை மட்ட குண்டு போடுதல் போட்டியில் 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று கிளிநொச்சி ஜெயபுரம் பாடசாலைக்கு மட்டுமல்லமால் ஜெயபுரம் கிராமத்துக்கும் பூநகரி பிரதேசத்துக்கும் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்து தந்த அன்ரன் அல்பிரட் அருணை பாராட்டி வாழ்த்தும் நிகழ்வு பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

அவுஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியத் தீவுகள்:

## இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்



அவுஸ்திரேலிய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்க்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது, பகலிரவுப் போட்டியாக இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்ற நிலையில், தொடரைச் சமப்படுத்துவதற்கு இப்போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றாக வேண்டிய நிலை காணப்படுகின்றது.

முதலாவது போட்டியில் காயமடைந்த அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் பற் கமின்ஸ், இப்போட்டியில் விளையாடவில்லை என்ற நிலையில், அவரை அணியில் ஸ்கொட் போலண்ட் பிரதியிட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளின் கேமார் றோச், ஜேடன் சியல்ஸும் காயத்தால் அவதிப்படுகின்ற நிலையில், அவர்களை அன்டர்சன் பிலிப், மார்க்குய்னோ மின்ட்லி ஆகியோர் அணியில் பிரதியிடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவுஸ்திரேலிய அணியின் விக்கெட்டுகளை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றுவதைப் பொறுத்தே இப்போட்டியின் முடிவு தங்கியுள்ளது.



எல்.பி.எல்:

## தம்புள்ள ஓறாவை வென்ற ஜஃப்னா கிங்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில், ஹம்பாந்தோட்டையில் நேற்று (07) நடைபெற்ற தம்புள்ள ஓறாவுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஓறாவின் அணித்தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஓறா, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ஜோர்டான் கொக்ஸ் 43 (22) ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், மகேஷ் தீக்ஷன 4-0-20-3, விஜயகாந்த் வியாஸ்காந்த் 4-0-24-3, ஜேம்ஸ் புல்லர் 4-0-16-2, ஸமன் கான் 4-0-28-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 122 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிங்ஸ், சதீர சமரவிக்கிரமவின் ஆட்டமிழக்காத 62 (44), அவிஷ்க பெர்ணாண்டோவின் 51 (49) ஓட்டங்களோடு 15.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சதீர சமரவிக்கிரம தெரிவானார்.

இந்நிலையில், நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொழும்பு ஸ்டார்ஸுடனான போட்டியில் கண்டி பல்கோன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கொழும்பு ஸ்டார்ஸ்

கண்டி பல்கோன்ஸ்: 199/1 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அன்ட்ரே பிளட்சர் ஆ.இ 102 (67), பதும் நிஸங்க 71 (41), கார்லோஸ் பிறத்வெய்ட் ஆ.இ 20 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: சீக்குகே பிரசன்னா 1/23 [3], சுரங்க லக்மால் 0/29 [4])

கொழும்பு ஸ்டார்ஸ்: 90/10 (14.3 ஓவ.) (பந்துவீச்சு: வனிடு ஹஸரங்க 4/14 [3], பேபியன் அலென் 2/1 [0.3], ஸஹூர் கான் 1/8 [2])

போட்டியின் நாயகன்: அன்ட்ரே பிளட்சர்

இந்நிலையில், இன்று (08) பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஓறாவும், ஸ்டார்ஸும் மோதவுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 08 டிசெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.